1992 எப்ரல் 8]

2. ஆஸ்கார் விருதுபெற்ற திரைப்படத் தயாரிப்பாளர், இயக்குநர், திரு. சத்யஜித் ரேக்கு அவையின் சார்பில் முதலமைச்சர் பாராட்டுரைகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தியத் திருநாட்டிற்குப் புகழும் பெருமையும் சேர்க்கிற வகையில் திரைப்பட இயக்குநர் திரு. சத்தியஜித் ரே அவர்களுக்கு உலகப் புகழ் மிக்க விருது கிடைத்தமை பற்றி இப்பேரவையில் தன்னுடைய வாழ்த்துக்களை, பாராட்டுக்களைத் தெரிவிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே விருப்பம் தெரிவித்திருக்கிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி). அத்தகைய சிறப்புக்குரிய பெருமகனைப் பாராட்டுவதற்குரிய எல்லாச் சிறப்புகளையும் புகழையும் பெற்ற புரட்சித் தலைவி அவர்களே இதை அவையில் விளக்கவேண்டுமென்று அனுமதி கோரியிருக்கிறார்கள். அவர்கள் இப்போது தன்னுடைய பாராட்டுக்களை அவையின் சார்பில் அவர்களுக்குத் தெரிவிக்கக் கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10—30

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியத் திரைப்பட மறுமலர்ச்சிக்கு வித்திட்டு தான் வாழும் காலத்திலேயே ஒரு சகாப்தத்தை உருவாக்கிய பெருமை திரைப்படத் தயாரிப்பாளர், இயக்குநர், திரு. சத்தியஜித் ரே அவர்களேயே சாரும். தன்னுடைய 40 ஆண்டு காலத் திரைப்பட அனுபவத்தின் மூலம், இந்தியத் திரைப்படச் சரித்திரத்தில் ஒரு இமாலய சாதனையைப் படைத்தவர் அவர். பழமையிலே ஊறிப் போயிருந்த இந்தியத் திரைப்படத் துறைக்கு தனது புரட்சிகரமான திரைப்படங்களால் புத்துணர்வையும் புதிய எழுச்சியையும் கொடுத்து, நம் நாட்டில் திரைப்படத் துறையின் வளர்ச்சிக்குப் புதிய பரிமாணங்களை வழங்கியவர். வாழ்க்கையில் நடைபெறும் சாதாரண நிகழ்ச்சிகளைக்கூட, கலை நுட்பத்தோடு சித்தரித்து திரை உலகில் தனக்கென ஒரு உயர்ந்த இடத்தைப் பிடித்தவர். திரைத் துறையைச் சார்ந்த பல்வேறு பிரிவுகளில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டு வெற்றியின் எல்லைக்குள் நிகழ்த்திய சாதனைகள் திரைப்பட உலகினர் என்றென்றும் கற்று உணர வேண்டிய கலைக் களஞ்சியம் ஆகும். தன்னுடைய முதல் படமான 'பதர் பாஞ்சாலி' முதல், விரைவில் வெளியிடப்படவுள்ள அகாண்டக்' படம் வரை, பல்வேறு திரைக்காவியங்களை உருவாக்கி தனது தனித் தன்மையை அனைத்திலும் பதித்து, திரைத் துறையின் திறனாய்வாளர்களின் கற்பனைக்கும் எட்டாத அளவுக்கு வெற்றி வாகை சூடிய விற்பன்னர் அவர். திரைப்

[டாக்டர் ஜெ. ஜெயலலிதா] [1992 ஏப்ரல் 8

பட உலகில் அவர் புரிந்துள்ள மகத்தான சாதனைகளால் இன்று திரைப்படத் துறையின் வளர்ச்சியைத் திறனாய்வு செய்பவர்கள், சத்யஜித் ரே-வுக்கு முன், பின், என்று இரு கால கட்டங்களாக பிரித்து ஆய்வு செய்யும் அளவுக்கு அவர் உயர்ந்து விளங்குகிறார். திரை உலகில் நம்பிக்கையோடு நுழையும் ஆயிரக்கணக்கான இளைஞர்களுக்கு இவரது அனுபவம் ஒரு அகராதி. இந்திய நாட்டின் கலை உலகப் பெருமைகளை முதன்முதலாக உலக அளவில் அறிமுகப்படுத்திய பெருமையும், சிறப்பும் திரு. சத்தியஜித் ரே அவர்களையே சாரும். தனது திரை உலக அனுபவத்தால் விரிந்து, பரந்து ஆலமரமாக வியாபித்து புதியவர்களுக்குப் புகலிடம் கொடுக்கும் நிழலாகவும், திரை உலகில் ஏற்கெனவே தன்னை ஈடுபடுத்திக் கொண்டவர்களுக்கு வழிகாட்டியாகவும் வாழ்ந்து வருகிறார். திரு. சத்யஜித் ரே அவர்கள் திரைப்படத் துறைக்கு மட்டுமே சொந்தமானவர் அல்லர். தான் ஈடுபட்ட துறைகளில் எல்லாம் தலைசிறந்து விளங்கியதோடு மட்டுமல்லாமல், தனக்கே உரித்தான முத்திரையையும் அவற்றில் அவர் பதித்தார். அவர் குழந்தைகளுக்காக எழுதிய வங்க மொழி நூல்கள் மேற்கு வங்கத்தில் மிகவும் பிரசித்திபெற்றவை. அவர் ஓவியத்திலும், இசையிலும், சிற்பக் கலையிலும் தனது புகழ் முத்திரையைப் பதித்தவர். இவ்வாறு பல்வேறு சிறப்புகளைப் பெற்று பல்துறை விற்பன்னராகத் திகழும் திரு. சத்யஜித் ரே அவர்களுக்கு அண்மையில் இந்திய அரசு, நமது நாட்டின் மிகப் பெரிய விருதான பாரத ரத்னா விருதினை வழங்கிச் சிறப்பித்துள்ளது. தற்போது American Academy of Motion Pictures Arts and Sciences என்ற அமைப்பு, திரை உலகின் மிக உயர்ந்த அரிய விருதான ஆஸ்கார் அவார்டை திரைப்படத் துறையில் அவர் வாழ்நாள் முழுவதும் புரிந்த சாதனைகளுக்காக திரு. சத்யஜித் ரே அவர்களுக்கு வழங்கிச் சிறப்பித்துள்ளது. இந்த விருதினைப் பெறும் முதல் இந்தியரும் இவரே. இந்த விருது தொடங்கப் பட்ட நாள் முதல், கடந்த 80 ஆண்டுக்கால வரலாற்றில் உலகிலேயே இவரையும் சேர்த்து 6 சான்றோர்களுக்குத்தான் இந்த உயர்ந்த விருதினைப் பெறுகிற பெருமை கிடைத்துள்ளது. இந்த வரிசையில் திரு. சத்யஜித் ரே அவர்கள் இடம் பெற்று நமது நாட்டின் பெயரையும், புகழையும் உலக அளவில் உயர்த்தி உள்ளார். இந்த விருதினைப் பெற்றமைக்காக அவரைப் பாராட்டிப் பெருமை அடைவது ஒவ்வொரு இந்தியரின் கடமையாகும்.

முற்பகல் 10-35

திரு. சத்யஜித் ரே அவர்களுக்குக் கிடைத்துள்ள இந்த அரிய பெருமையினைப் பாராட்ட நமது மாமன்றமும் மகிழ்ச்சியோடு முன்வந்துள்ளது. அந்த வகையில் இந்த மாமன்றத்தின்

அனைத்து உறுப்பினர்களும் தங்களது வாழ்த்துரைகளையும், பாராட்டுதல்களையும் திரு. சத்யஜித் ரே அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்வதுடன், தற்போது உடல்நலம் குன்றி இருக்கும் அவர் விரைவில் பூரண குணம் அடைந்து இன்னும் பல்லாண்டு காலம் வாழ்ந்து மென்மேலும் பல பெருமைகளைப் பெற்று இந்தியத் திரை உலகிற்கும், இந்தியத் திருநாட்டிற்கும் பல சிறப்புகளைச் சேர்க்கவேண்டுமென்று உளமார வாழ்த்துகிறது, என்ற செய்தி பேரவையின் சார்பாக திரு சத்யஜித் ரே அவர்களுக்குத் தெரிவிக்கப்படவேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி),

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய உணர்வுகளோடு இந்தப் பேரவையும் தன்னை இணைத்துக்கொள்வதில் உண்மையிலேயே பெருமகிழ்ச்சி அடைகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒவ்வொரு இந்தியனும் தலைநிமிர்ந்து நிற்கக்கூடிய சாதனையைப் புரிந்து ஆஸ்கார் விருது பெறுகிற முதல் இந்தியர் என்கிற பெருமையைப் பெற்றிருக்கிற பெருமைக்குரிய திரு. சத்யஜித் ரே அவர்களைப் பாராட்டுவதில், இந்தப் பேரவையின் ஒவ்வொரு உறுப்பினரும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்ததைப் போல் ஒவ்வொரு இந்தியனும் பெருமைப்படுகிற அந்த சகாப்த நாயகனைப் பாராட்டுவதில் தங்களையும் இணைத்துக்கொள்கிற வகையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கோரியபடி இந்தப் பேரவை தன்னுடைய பாராட்டுக்களை, வாழ்த்துக்களை மகிழ்ச்சியுடன் புகழ்பெற்ற இயக்குநர் திரு. சத்யஜித் ரே அவர்களுக்குத் தெரிவிக்கிறது என்பதைத் தெரிவித்து அவர் விரைவில் பூரண குணம் அடைந்து இன்னும் பல்வேறு சாதனைகளை இந்தியத் திருநாட்டில் நிகழ்த்திட வேண்டும் என்ற வாழ்த்துக்களையும் தெரிவித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்த அந்தப் பாராட்டுரை அவையின் சார்பில் திருமிகு சத்யஜித் ரே அவர்களுக்குத் தெரிவிக்கப்படுகிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.